தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-9-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வங்கியாளர்கள் மற்றும் வேளாண் தொழில் முனைவோர்களின் நேர்முக கூட்டம்

இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் நிதியுதவியுடன் வங்கியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் நேர்முக கூட்டம் 3-9-2014 அன்று காலை 9.30 மணியளவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் வணிக மேம்பாட்டு மையத்தில் நடைபெற்றது. இம்மையத்தில் உறுப்பினர்களாக உள்ள 30 தொழில் முனைவோர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் 10 வங்கியாளர்கள் பங்கேற்று சிறப்பித்தினர்.

முனைவர் S. கணபதி அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். தொழில் முனைவோர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வங்கியாளர்கள் வேளாண் கடன்கள் வழங்குவதில் உள்ள பிரச்சனைகள் மற்றும் பல்வேறு வேளாண் தொழில் முனைவோருக்கு வழங்கும் கடன் திட்டங்கள் பற்றி விளக்கினார்கள்.

முனைவர். R. முருகேசன், இயக்குநர், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம் அவர்கள் தமது உரையில், கடன் வழங்கும்போது, அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் போன்றவற்றிற்கு முன்னுரிமை தராமல் வணிக தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனைவோரின் புதுமைத் தொழில்நுட்பத்திற்கு முன்னுரிமை தரவேண்டும் என்று எடுத்துரைத்தார்.

திரு. R. இனிகோ அருள் செல்வன், நபார்டு வங்கி மேலாளர் தனது சிறப்பிரையில், கிராம. புதுமைத்திட்டம், சிறுவிவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு, சரி ஒப்பு பங்கு உதவித்திட்டம் மற்றும் கடன் உத்திரவாதத் திட்டம் போன்றவற்றை விளக்கினார். மேலும் திரு. மோகன்ராஜ், மண்டல மேலாளர் சிண்டிகேட் வங்கி தமது உரையில், தொழில்முனைவோர்கள் கடன் பெறும்போது வங்கியாளர்களின் எதிர்பார்ப்பு மற்றும்

வேளாண் கடன்திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். மேலும், தொழில்முனைவோர்கள் தங்கள் வணிகம் மற்றும் தயாரிக்கும் பொருட்கள் பற்றி விளக்கிக் கூறினார்.

திரு. G. செல்வகுமார், உதவி பொது மேலாளர், ஐ.டி.பி.ஐ வங்கி, திரு. M. கார்த்திகேயன், துறை மேலாளர், கனராவங்கி, திரு. சேகர், முதன்மை மேலாளர், சிண்டிகேட் வங்கி, திரு. கிருஷ்ணமூர்த்தி, முதன்மை மேலாளர், சிண்டிகேட் வங்கி, திரு. R. ரவிச்சந்திரன், முதன்மை மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, திரு. S. நம்பி சீனிவாசன், வங்கி மேலாளர், திரு. ராஜேஸ், திரு. R. சந்திரன், திருவாங்கூர் ஸ்டேட் பாங்கு, செல்வி. G. விஜயலட்சுமி, உதவி மேலாளர், பாங்க் ஆப் இந்தியா, திரு. V. மகேஷ் குமார், உதவி மேலாளர், ஐ.டி.பி.ஐ வங்கி ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்றார்கள்.

இறுதியாக திரு. A.V. ஞானசம்பந்தம், வணிக மேலாளர், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம் நன்றி தெரிவித்தார்.

மக்கள் தொடர்பு அலுவலர்